கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

மாசி மாத இதழ்
NEWS BULLETIN
FEBRUARY 2021
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
12/09/20 முதல்	புதிய தவணைக்கான தமிழ்ப்பாட, கலைப்பாட வகுப்புகள் Zoom செயலி மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தவணையும், ஆசிரிய வேதனத்துக்காகத் தவணைக்கு £25 அல்லது ஒரு வருடத்திற்கு (மூன்று தவணைகள்) £70 அறவிடப்படுகிறது. கலைப்பாட ஆசிரியர்களின் தொடர்புகளுக்கு கர்நாடக சங்கீதம் திரு.தீனதயாளன் 07886969194 திருமதி.வானதி 07523431759 பரதநாட்டியம் திருமதி சத்தியகௌரி 07773591591 திருமதி அஜந்தா 07425577697 மிருதங்கம் - செல்வன்.தனுஜன் 07582418364 வீணை - செல்வி.சாத்விகா 07556130208 மேலும் தகவல்களைப் பெற்றுக்ககொள்ள திருமதி பொன்மணி 07436542925 அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.
சித்திரை	OFAAL எழுத்துப் பரீட்சை எதிர்வரும் சித்திரை மாதம் நடைபெறும். விண்ணப்ப முடிவு திகதி 01/03/2021

உலக தாய்மொழி தினம்

உலக தாய்மொழி தினம் மாசிமாதம் 21ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இன்றைய உலகில் மொழிகளுக்கெல்லாம் தாய் மொழியாக விளங்கும் தமிழ் மொழியை நாங்கள் பேசுவது எமக்கெல்லாம் பெருமையே!

அன்றையதினம் பிரித்தானியாவிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளை ஒன்றிணைத்து எமது தாய்மொழியாம் தமிழ்மொழியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் எமது கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்ப் பாடசாலை மாணவர்களும் பங்கு பெற்றிருந்தனர்.



பங்கேற்ற மாணவர்களின் விபரங்கள்.

பேச்சு:
செல்வி. ஹரணி கணேசன்.
செல்வன்.யஸ்வினண் உருத்திரன்
செல்வி. பவநிலா சிவகரன்
செல்வன். ஓவியன் இரட்ணம்
செல்வி. யதுசனா ரவிக்காந்
செல்வி. ஷஷ்விகா ஜெகதீசன்

கவிதை:
செல்வன். டனீஸ் குகநாதன்
செல்வன்.யோகிநாத் சதாரூபன்

பாடல்:
செல்வி .ஹஸ்ணி பாரதிராஜா
செல்வன். நேத்ரன் துறைவன்

திருக்குறள்:
செல்வி. மோனிகா ஜெய்கணேஷ்
செல்வன்:ஈஸ்வர்சாய் ஸ்ரீராம் வெங்கடேஸ்
செல்வன். ஸ்ரீராம் கணேசன்



உலக சாதனை நிகழ்ச்சி

கவியுலகப் பூஞ்சோலையின் உலக சாதனை நிகழ்வில், கொவன்றி தமிழர் நலன்புரிச்சங்கம் மற்றும் றக்பி தமிழ்மொழி - அழகியல் கற்கைகள் நிலையம் என்பன ஒன்றிணைந்து "**பாரதியாரின் தமிழ்ப் பற்று**" என்ற தலைப்பில் பல்சுவை நிகழ்வினைச் செய்திருந்தன.




இந்நிகழ்வில் கலந்துகொண்டோர் பாரதியாரின் பாடல்களைப் பாடியும், அவரது கவிதைகள், நினைவுக் குறிப்புகளை மீட்டியும் நிகழ்வினைச் சிறப்பித்தனர். இந்நிகழ்வு அமெரிக்காவின் தமிழ்த் தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது.


பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. நிகழ்வினைப் பார்த்து மகிழ கீழ்வரும் இணைப்புக்களை அழுத்தவும்

https://www.hashcut.com/v/xxSFwx2

https://www.facebook.com/TamilAmericaNetwork/videos/416821636099499/?sfnsn=scwspwa

நிகழ்வில் கலந்து கொண்டோர்





பாரதியார்

தாய் மொழியான தமிழ் மொழியின் மீதும் தான் பிறந்த தாய் நாட்டின் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டவரான, மகாகவி என்று அழைக்கப்படும் பாரதியார் பற்றி எழுதுகிறேன்.

பாரதியார் தமிழ்நாட்டில் எட்டயபுரம் என்னும் இடத்தில் 1882 ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சின்னசாமி ஐயர். தாயார் பெயர் இலக்குமி அம்மாள். இவருடைய இளமைப் பெயர் சுப்பிரமணியன். செல்லப் பெயர் செல்லையா. பாரதியார் தமிழ், ஆங்கிலம், வடமொழி என்பவற்றில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர். பாரதியார் தமிழ் ஆசிரியராகவும், பின் சுதேச மித்திரன் நாளிதழின் துணை ஆசிரியராகவும், 'இந்தியா' என்னும் பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார்.

இந்திய சுதந்திர போராட்டம் என்பது வீரம் மிக்க ஒரு வரலாறு ஆகும். இவ் வரலாற்றில் தமிழகத்தில் தோன்றி உலகு இந்தியாவியும் தன் கவிதையாலும், எழுத்துக்களாலும் சுதந்திர வேட்கையை வீறு கொண்டு எழ செய்தவர் நம் தேசிய கவிஞர் பாரதியார் ஆவார்.

சுதந்திர பாரதம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று கனவு கண்ட பாரதியார், தன் கவிதை புலமையால் அனைவரையும் கவர்ந்திழுக்கும் வண்ணம் பாப்பாப்பாட்டு, குயில்பாட்டு, போன்ற காவியங்களையும் எழுதியுள்ளார்.

மகாத்மா காந்தியால் பாராட்டப்பட்ட, இம் மாபெரும் தேசிய கவிஞரின் பாடல்களை, பாரதியாரை இருளில் மூழ்கிக் கிடந்த பாரததேச மக்களை, புதியதோர் பாரதம் தோன்ற வழிவகுத்தார்

ஆக்கம்
பவநிலா சிவகரன்

கொடிய கொரோணாவும் குழம்புகின்ற மாணவர்களும்

இன்றைய காலகட்டத்தில், எல்லா மக்களது வாழ்வியல்களும் மாறிப் போய்விட்டது. வீட்டுக்குள்ளேயே பலவித மனப் போராட்டங்களுடன் வாழ்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஒரு நாட்டின் முதுகெலும்பே அந்த நாட்டின் கல்வி முறையும் மாணவர்களுமே.

ஆனால், இன்று மாணவர்களும், பெற்றோர்களும் பெரும் தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். நன்றாகப் படித்தும், தாம் நினைக்கும் துறையைப் பல்கலைக்கழகங்களில் பெறமுடியாதுள்ளனர். ஆசிரியரின் கணிப்பில் கிடைக்கும் துறையிலேயே கல்வியைத் தொடர்கிறார்கள்.

பெரியவர்களை விடச் சிறுவர்களின் படிப்பு பெரும் கவலைக்குரியதாக உள்ளது. ஆசிரியர்கள்தான் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இதனால் பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வித்தரம் பற்றி ஒன்றுமே செய்ய முடியாதுள்ளனர்.

உயர் வகுப்பு மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பலர் மன அழுத்தத்திற்கு உள்ளாகிறார்கள். தற்கொலை செய்யும் அளவிற்குப் போய்விடுகிறார்கள்.

இந்தநிலை விரைவில் மாற வேண்டும். பெற்றோராகிய நாங்களும், பிள்ளைகளின் கல்வியில் ஆதரவாகவும், பொறுப்பாகவும் இருத்தல் வேண்டும். பிள்ளைகளும் பெற்றோரைப் புரிந்து நடந்தால் நல்லதே நடக்கும்.

“கொடிய நோயை விரட்டுவோம்!
கட்டுப்பாட்டுடன் இருப்போம்!
நம்பிக்கையை கைவிடோம்!
நல்லதே நடக்கும் காத்திருப்போம்!”

நன்றி
திருமதி ஜெயாதேவி சிவநேசன்
தமிழாசிரியை.

மகா சிவராத்திரி உருவான வரலாறு!

பிரளய காலத்தின் போது பிரம்மனும், அவரால் படைக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளும் அழிந்துவிட்ட நிலையில், இரவுப்பொழுதில் அம்பிகை உமாதேவி, பரமேஸ்வரனை நினைத்துப் பூஜை செய்தாள். நான்கு ஜாமங்களிலும் இரவு முழுவதும் ஆகம விதிப்படி அர்ச்சனை செய்தாள்.

பூஜையின் முடிவில் அம்பிகை ஈஸ்வரனை வணங்கி, அடியேன் தங்களைப் பூஜித்த இந்த இரவை, தேவர்களும், மனிதர்களும் தங்கள் திருநாமத்தாலேயே, அதாவது ‘சிவராத்திரி’ என்றே கொண்டாட வேண்டும்’ என்று வேண்டினாள்.

அந்தச் சிவராத்திரியன்று, சூரியன் மறைந்தது முதல், மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை, தங்களை (சிவனை)ப்பூஜை செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு எல்லாவிதமான பாக்கியங்களையும் தந்து, முடிவில் மோட்சத்தையும் அருள் வேண்டும்’ என்றும் உமாதேவி வேண்டிக்கொண்டாள்.

சிவபெருமானும், ‘அப்படியே ஆகட்டும்!’ என்று கூறி அருள் புரிந்தார். எனவே சிவராத்திரியன்று முறைப்படி நாங்கள் சிவபெருமானை வழிபட்டுப் பிறவிப் பெரும் பயனையடைந்து மோட்சமெனும் பாக்கியத்தைப் பெற்றுக் கொள்வோம். இம்முறை ஆங்கில மாதம் பங்குனி 11ம் நாள் சிவராத்திரி வருகிறது.

“ஓம் நமசிவாய”

இனிய நந்தவனம் இதழில் வெளிவந்த கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் உயர்திரு கந்தையா அரியரட்ணம் அவர்களது படைப்பு



